DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: ST.C. No. 309/2025 |
| Session | ... | |
| | | Prosecution / PW–1 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.ஸ்ரீதரன் |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused present.)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 12.03.2026

---

**முதல் விசாரணை**

1. நான் தற்போது பரமக்குடியில் Divisional Excise officer ஆக பணியாற்றி வருகிறேன். வழக்கு சம்பவ காலத்தில் நான் ஆதிதிராவிடர் நலவாரியம் முதுகுளத்தூர் தனி வட்டாட்சியராக பணியாற்றி தேர்தல் பறக்கும் படையில் பணி அமர்த்தப்பட்டிருந்தேன். கடந்த 29.03.2024 தேதி மதியம் 12 மணியளவில் தேர்தல் ரோந்து தொடர்பாக நான், SSI சிவகுமார், காவலர் வசந்தகுமார்,பெண் காவலர் தனுசியா ஆகியோர் ரோந்துசுற்றி வரும்போது நம்புதாளை கிராமநிர்வாக அலுவலர்,

ஊராட்சிதலைவர் அலுவலக கட்டிடங்களின் பின்புறம் கூட்டமாக பெண்கள் நின்று பேசி கொண்டிருந்தனர். உடனே நாங்கள் அந்த பெண்களிடம் சென்று என்ன செய்கிறீர்கள் என்று விசாரித்தோம். அவர்கள் நாங்கள் மகளிர் சுயஉதவிகுழு சார்பாக இங்குவ ந்துள்ளோம். இங்கு பிரச்சாரத்திற்கு வருவதாக தெரிவித்தார்கள் என்று சொன்னார்கள். அதன்பின் முகமது சலீம் என்னும் நபர் என்னிடம் வந்து ஒரு டோக்கனை கொடுத்து இந்த டோக்கனை கொடுத்தால் பணம் தருவதாக சொன்னார்கள் ஆனால் பணம் தரவில்லை என்று என்னிடம் தெரிவித்தார்.

2. நான் மேற்படி முகமது சலீமிடம் எழுத்து பூர்வ வாக்குமூலம் பெற்றேன். அவர் என்னிடம் ராவுத்தர் என்னும் நபர் தான் என்னிடம் டோக்கனை கொடுத்தார் வேறு எதுவும் தெரியாது என்று தெரிவித்தார். நான் உடனே மேற்படி முகமது சலீம் என்னிடம் கொடுத்த டோக்கனையும் நான் அவரிடம் இருந்து பதிவு செய்த வாக்குமூலத்தையும் எடுத்து கொண்டு தொண்டி காவல்நிலையம் சென்று தேர்தல் விதிமீறல் தொடர்பாக புகார் அளித்து டோக்கனை போலிசாரிடம் ஒப்படைத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார்மனு நான் காவல்நிலையத்தில் மேற்படி கொடுத்த புகார் மனுதான். அதில் இடம்பெற்றுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னைவிசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

1. 2024 ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர்தான் மாவட்டத்தின் தேர்தல் அதிகாரி என்றால் சரிதான். தேர்தல் விதிமீறல்கள் தொடர்பாக கண்காணிக்க இந்திய ஆட்சிபணி அதிகாரிகள் இருவர் Observors ஆக பணியாற்றினர். நாடாளுமன்ற தேர்தலில் திருவாடானை சட்டமன்ற தொகுதிக்கு மாவட்ட வழங்கல் அதிகாரி தேர்தல் அதிகாரியாக செயல்பட்டார் என்றால் சரிதான். DSO துணையாக திருவடானை வட்டாட்சியர் உதவி தேர்தல்அதிகாரியாக செயல்பட்டார் என்றால் சரிதான். எங்கள் பறக்கும்படை குழுவில் நான் கிராமநிர்வாக உதவியாளர்கள், போலிசார், வீடியோகிராபர் இருப்பார்கள் என்றால் நான் போலிசார், வீடியோ கிராபர்கள் இருப்போம். திருவடானை சட்டமன்ற தொகுதியில் 3 பறக்கும்படையினர் அச்சமயம் செயல்பட்டார்கள்.

2. 3 குழுவினர்கள் Shift  முறையில் பணியாற்றுவோம்.  சம்பவ நேரத்தில் எங்கள் குழுவில் உள்ள அனைத்து நபர்களும் சம்பவயிடத்தில் இருந்தார்கள் என்றால் சரிதான். நான் வாக்குமூலம் பதிவு செய்ததையும் டோக்கனை கைப்பற்றியதையும் வீடியோ கிராபர் வீடியோ பதிவேடு எடுத்தார் என்றால் சரிதான். வீடியோ பதிவேடு எடுத்த விவரத்தை போலிசாரிடம் தெரிவித்தேனா என்றால் இல்லை. அ.சா.ஆ.1 புகார் மனுவில் வீடியோ பதிவேடு எடுதத விவரத்தையும் குழுவினர் விவரங்களையும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்., ஆஜர் எதிரி  IUML கட்சியின் ஒன்றிய செயலாளர் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியை சம்பவயிடத்தில் வைத்து பார்த்தேன் என்றால் இல்லை.  டோக்கனில்  IUML கட்சியின் பெயரோ, வேட்பாளரின் பெயரோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.  வழக்கமாக டோக்கனை உணவகங்கள் அல்லது கடைகளில் விநியோகிப்பார்கள் என்றால் சரிதான்.

3. என்னிடம் வாக்குமூலம் கொடுதத நபரை காவல்நிலையம் அழைத்து சென்று போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்தேன்.வாக்குமூலம் அளித்த நபர் எந்த கட்சி சேர்ந்த நபர் என்றால் அந்த விவரம் தெரியாது.  IUML கட்சியின் எதிர்கட்சியை சேர்ந்தவர்கள் பொய்யாக புகார் தெரிவிக்க வாய்ப்புள்ளது என்றால் அந்தவிவரம் எனக்கு தெரியாது.  பொதுவாக எனது உயர்அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்து தான் தகவல் தெரிவிக்க வேண்டும என்றால் சரிதான்.  பொதுவாக எங்கள் குழுவில் எத்தனை தேர்தல் விதிமீறல்களை குறித்து வழக்கு பதிவுசெய்தோம் என்று எழுத்து பூர்வமாக மேல்அதிகாரிகளுக்கு  தெரிவிக்க வேண்டும் என்றால் சரிதான். புகார்அளித்த பின்பு அன்றையதினமே போலிசார் என்னை விசாரித்தார்கள் அதற்கு பின் விசாரிக்கவில்லை.

4. போலிசார்விசாரணையில் விதிமீறல்கள் குறித்து உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கும் எழுத்துபூர்வ படிவத்தை நான் கொடுக்கவில்லை.  புகாரில் மேல் அதிகாரிகளின் அனுமதி பெற்று தான் புகார் அளித்துள்ளேன் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.  என்னிடம் வாக்குமூலம் அளித்த நபரை போலிசார் விசாரித்து வாக்குமூலம் பெற்றார்களா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்., நான்சொன்னவாறு எதிரி எவ்வித தேர்தல் விதிமீறல்களிலும் ஈடுபடவில்லை

என்றும் எதிர்கட்சியினர் கொடுத்த பொய் புகாரை சரிவர விசாரிக்காமல் புள்ளிவிவர கணக்கிற்காக எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார் வாக்குமூலத்தை வீடியோ பதிவேடு எடுத்த நகலை போலிசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்து பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் ஆஜர் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.